بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களான ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**M.T.A தர்பிய்யத்திற்கான சிறந்த வழியாகும். மேலும் எல்லா விதமான குழப்பங்களிலிருந்து பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் நமது மார்க்க அறிவை அதிகரிக்கச் செய்யக் கூடியதாகவும் இருக்கின்றது. இதன் பக்கம் ஜமாஅத் உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும். இதனோடு தம்மை இணைத்துக் கொள்ளவும்**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 29 ஜுன் 2018** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், அவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களைப் பற்றி கூறியிருந்தேன். அவர்களைப் பற்றிய மேலும் சில அறிவிப்புகள் இருந்தன. அவற்றை இன்று நான் எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் மரணிக்கும் நாள் வரை எவர் மீது அன்பு கொண்டிருந்தார்களோ அவரை அல்லாஹ் நரகத்தில் நுழையச் செய்ய மாட்டான் என்று நான் நம்புகின்றேன்.

ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும் நேசித்தார்கள்.

கூறுகிறார்கள். நான் இரண்டு நபரைப் பற்றி சாட்சி கூறுகின்றேன். அவர்கள் இருவர் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் மரணிக்கும் வரை அன்பு செலுத்தினார்கள். ஒருவர், அப்துல்லாஹ் பின் மஸ்வூது ஆவார். மற்றொருவர், அம்மார் பின் யாஸர் ஆவார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களைப் பற்றி கூறினார்கள். அவர்கள் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை ஈமானில் நிரம்பியவராக இருந்தார்கள். ஹஸ்ரத் குபாப் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களிடத்தில் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் அவர்கள் அவரிடத்தில் அருகில் வாருங்கள். இந்த சபையில் உங்களைத்தவிர வேறு எவரும் அதிக உரிமை படைத்தவர் அல்ல. ஆனால் ஹஸ்ரத் அம்மார் அவர்களைத் தவிர என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் குபாப் அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களிடத்தில் நிராகரிப்பவர்கள் தரப்பிலிருந்து தமக்கு இழைக்கப்பட்ட முதுகிலுள்ள காயத்தின் அடையாளங்களைக் காட்டினார்கள். இவர்கள் ஆரம்ப காலத்தில் அதிகமான கஷ்டங்களை சந்தித்தனால் ஹஸ்ரத் உமர் அவர்கள் அவர்களை கண்ணியப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதோடு ஹஸ்ரத் அம்மார் அவர்களைப் பற்றி, அவர்களும் அதிகமான கஷ்டங்கள் சந்தித்தார்கள் என்று கூறினார்கள்.

அபூ மஜ்லிஸ் அவர்கள் கூறுகிறார்கள். ஒரு முறை ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்கள் மிகவும் சுருக்கமாக தொழ வைத்தார்கள். அவர்களிடத்தில் ஒருவர் அதற்கான காரணத்தை கேட்டார். அதற்கு அம்மார் பின் யாஸிர் அவர்கள், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுததைப் போன்றே தொழுதேன். கடுகளவும் கூட அதற்கு மாற்றமாக தொழுவில்லை என்று கூறினார்கள்.

இந்த அறிவிப்பு நமக்கு இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது ஒரு முறை ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்கள் மிகவும் சுருக்கமாக தொழ வைத்தார்கள். மக்களுக்கு இதனால் வியப்பு ஏற்பட்டது. அதற்கு ஹஸ்ரத் அம்மார் அவர்கள், நான் ருகூ மற்றும் சுஜூதை முழுமை செய்யவில்லையா? என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் ஏனில்லை? என்றார்கள். ஹஸ்ரத் அம்மார் அவர்கள் நான் இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்ட ஒரு துஆவை செய்தேன் என்று கூறினார்கள்.

அந்த துஆ இதுவாகும். அதாவது அல்லாஹ்வே! மறைவானவற்றைப் பற்றிய அறிவு உனக்கே இருக்கின்றது. அனைத்து படைப்பினங்களையும் உனது ஆற்றலே சூழ்ந்துள்ளது. உனது அறிவில் எனது வாழ்க்கை எப்போது வரை எனக்கு சிறந்ததாக இருக்குமோ அப்போது வரை நீ என்னை உயிரோடு வைப்பாயாக. எனது மரணம் எனக்கு சிறந்ததாக இருக்கும் போது நீ எனக்கு மரணத்தை வழங்குவாயாக. அல்லாஹ்வே! நான் மறைவாக இருக்கும் நிலையிலும், வெளிப்படையாக உன் முன்னால் இருக்கும் நிலையிலும் உன் மீதுள்ள அச்சத்தை வேண்டியவனாக இருக்கின்றேன். மேலும் கோபம் மற்றும் திருப்தி ஆகிய

நிலைமைகளில் உண்மையை கூறக்கூடிய ஆற்றலை வேண்டுகின்றேன். மேலும் வறுமையிலும், செல்வ செழிப்பிலும் நடுநிலையை மேற்கொள்ளவும், உனது முகத்தை காண்பதினால் ஏற்படும் இன்பதைத்தையும், மேலும் உன்னை சந்திப்பதற்கான ஆர்வத்தையும் உன்னிடம் வேண்டுகின்றேன். துன்பத்தை விளைவிக்கின்ற விஷயங்கள் மற்றும் வழிகேட்டின் பக்கம் கொண்டு செல்கின்ற குழப்பங்களிலிருந்து உனது அடைக்கலத்தில் வருகின்றேன். அல்லாஹ்வே! எங்களை ஈமானின் அழகால் எங்களை அலங்கரிப்பாயாக. மேலும் எங்களை நேர்வழி பெறக்கூடிய மக்களுக்கு வழிகாட்டியாக ஆக்குவாயாக.

அபூ நவ்ஃபல் பின் அபீ அக்ரப் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்கள் மிகவும் அதிகமாக அமைதியை மேற்கொள்பவர்களாகவும், மிகவும் குறைவாகவே பேசக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். மேலும் அவர்கள், நான் குழப்பங்களிலிருந்து அல்லாஹ்வின் அடைக்கலத்தை வேண்டுகின்றேன். நான் குழப்பங்களிலிருந்து அல்லாஹ்வின் அடைக்கலத்தை வேண்டுகின்றேன் என்று கூறி வந்தார்கள்.

ஹேஸ்மா பின் அபீ சப்ரா கூறுகின்றார்கள். நான் மதீனா வந்தேன். மேலும் அல்லாஹ்விடம், எனக்கு ஏதாவதொரு நல்ல மனிதரின் அருகாமையை வழங்குவாயாக என்று துஆ செய்தேன். இதன் விளைவாக அல்லாஹ் எனக்கு ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களது அருகாமையை வழங்கினான். ஹஸ்ரத் அபூ ஹுரைரா அவர்கள் என்னிடம், நீங்கள் எந்த மக்களைச் சார்ந்தவராவீர்கள்? என்று வினவினார்கள். அதற்கு நான் எனது தொடர்பை கூஃபா மண்ணைச் சார்ந்ததாகும். அறிவு மற்றும் நன்மையை பெறுவதற்காக இங்கு நான் வந்துள்ளேன் என்று கூறினேன்.

அதற்கு ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், உங்களிடத்தில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தண்ணீரையும், காலணிகளையும் சுமக்கின்ற ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இரகசியத்தைப் பேணக்கூடிய ஹஸ்ரத் ஹுதைஃபா பின் யமான் அவர்களும், அல்லாஹ் ஷய்த்தானிடமிருந்து அடைக்கலம் வழங்கியுள்ளான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நாவின் மூலமாக நற்செய்தி வழங்கப்பட்ட அம்மார் பின் யாஸிர் அவர்களும், மேலும் இரு வேத நூட்களான இன்ஜீல் மற்றும் திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெற்றிருக்கின்ற ஹஸ்ரத் சல்மான் அவர்களும் உங்களிடம் இல்லையா? இந்த மக்களெல்லாம் இருக்கும் போது ஏன் இவர்களிடமிருந்து பயனடையவில்லை என்றும் வினவினார்கள்.

முஹம்மது பின் அலி பின் ஹன்ஃபியா அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோயுற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மாரிடம், ஜிப்ரீல் என்மீது ஓதி ஊதிய துஆவை நான் உமக்கு கற்றுத் தரவா? என்று கேட்டார்கள். அதற்கு அம்மார் அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! கற்றுத் தாருங்கள் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இந்த துஆவை கற்றுக் கொடுத்தார்கள்.

بسم الله ارقيك والله يشفيك من كل داء يؤذيك அதாவது நான் அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பித்து உம்மீது ஊதுகின்றேன். அல்லாஹ் உமக்கு துன்பத்தை தரக்கூடிய ஒவ்வொரு நோயிலிருந்தும் உம்மை குணமளிப்பானாக. நீங்கள் அதை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் மகிழ்ச்சியடையுங்கள்.

ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

சுவர்க்கம் ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர், ஹஸ்ரத் சல்மான், ஹஸ்ரத் பிலால் ரலியல்லாஹு தஆலா அன்ஹும் ஆகியோரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தோம். அன்னார் கூறினார்கள். நான் உங்கள் மத்தியில் எவ்வளவு நேரம் இருப்பேன் என்பது எனக்குத் தெரியாது. அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் அவர்களின் பக்கம் சைகை செய்தவாறு நீங்கள் எனக்குப் பிறகு இந்த மக்களை பின்பற்றுங்கள். மேலும் அம்மாரின் வழிமுறையை மேற்கொள்ளுங்கள். இப்னு மஸ்வூது எதை உங்களுக்கு கூறிவாரோ அவற்றை உண்மைப்படுத்துங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கு எதிராகவும், கிலாஃபத்திற்கு எதிராகவும் ஏற்பட்ட குழப்பங்கள் இதன் விளைவாகவே ஏற்பட்டது. அதாவது அம்மக்களிடம் சரியான தர்பிய்யத் இருக்கவில்லை. மேலும் மிகக்குறைவாகவே தலைமையகத்திற்கு வருகை தந்தார்கள். திருக்குர்ஆனின் ஞானமும், மார்க்க அறிவும் மிகக்குறைவாகவே இருந்தது.

எனவே ஜமாஅத் மக்களுக்கு அன்னார் அந்த நேரத்தில் கவனமூட்டினார்கள். அதாவது இந்த விஷயங்களிலிருந்து நீங்கள் படிப்பினையும், அறிவுரையும் பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே திருக்குர்ஆனின் ஞானத்தை கற்றுக் கொள்ளுங்கள். எப்போதும் தலைமையகத்தோடு தொடர்பு வைத்திருங்கள். மார்க்க அறிவை கற்றுக் கொள்ளுங்கள். அதன் மூலமாக ஜமாஅத்தில் எந்தவொரு குழப்பமும் உருவானால் அதிலிருந்து உங்களால் தப்பித்துக் கொள்ள இயலும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.அல்லாஹ் இக்காலத்தில் M.T.A வின் மூலமாக ஒரு புதிய வழியை திறந்து தந்துள்ளான். நாம் விரும்பினால் இதன் மூலமாக மார்க்க அறிவை கற்றுக் கொள்ள இயலும். திருக்குர்ஆன் தர்ஸ் இதில்

வருகின்றது. ஹதீஸின் தர்ஸ் இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூட்களிலிருந்து தர்ஸ் கொடுக்கப்படுகின்றது. குத்பாக்கள் இருக்கின்றது. இதர சொற்பொழிவுகள் இருக்கின்றன. மாநாடுகள் இருக்கின்றன. இதன் மூலமாக கிலாஃபத்தோடு தொடர்பு ஏற்படுகின்றது.

எனவே இவ்வகையில் நாம் நம்மையும் நமது சந்ததிகளையும் இந்த வழிமுறைகளின்படி இணைத்தால் இது தர்பிய்யத்திற்கு மிகச்சிறந்த ஒரு வழியாக இருக்கின்றது. மேலும் இது எல்லா விதமான குழப்பங்கலிருந்தும் காப்பாற்றக் கூடியதாகவும் இருக்கின்றது. மேலும் மார்க்க அறிவை அதிகப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. எனவே இதன் பக்கம் ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் M.T.A என்ற வழியை தந்துள்ளான். தம்மைத்தாமே அதில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்துல் மன்ஸர் என்ற ஒரு சஹாபியின் வாழ்க்கை பற்றி எடுத்துக் கூறினார்கள். அன்னார் ஔ் அன்ஸாரின் அவ்ஸ் கோத்திரத்தை சார்ந்தவராவார்கள். மேலும் செய்தி சேகரித்து வந்த 12 நபர்களில் ஒருவர் ஆவார். மேலும் இவர் பைத்தே உக்பாவில் கலந்து கொண்டுள்ளார். பதர் போர் சந்தர்ப்பத்தில் மதீனாவிலிருந்து புறப்படும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் அவர்களை மதீனாவின் அமீராக நியமித்தார்கள்.

ஆனால் மதீனாவிலிருந்து 36 மைல் தொலைவிலுள்ள ரூஹா என்ற இடத்தை அன்னார் அடைந்த போது, அப்துல்லாஹ் ஒரு பார்வையற்ற மனிதர் ஆவார். மேலும் குறைஷிகளின் படை வருவது தொடர்பான செய்தியானது, அன்னாருக்குப் பின்னால் மதீனாவின் ஏற்பாடுகளும் வலுவானதாக இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்த்தது.

இதன் எண்ணத்தின் விளைவாக அன்னார் ஹஸ்ரத் அபூ லுபாபா பின் மன்ஸர் அவர்களை மதீனாவிற்கு அமீராக நியமித்து திருப்பி அனுப்பினார்கள். மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் அவர்களைக் குறித்து அவர் தொழுகைக்கு மட்டும் இமாமாக இருக்கட்டும். ஆனால் நிர்வாக பணிகளை அபூ லுபாபா அவர்கள் மேற்கொள்வார்கள் என்ற கட்டளையும் பிறப்பித்தார்கள். இவ்வாறு இவர்கள் பாதி வழியிலேயே திரும்பி சென்று விட்டார்கள். இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் கிடைத்த செல்வத்தில் அவர்களுக்கும் பங்கை நிர்ணயித்தார்கள்.

பதர் போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் அபூ லுபாபா ஆகிய மூவரும் மாறி மாறி ஒட்டகத்தில் சவாரி செய்து வந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் அபூ லபாபா ஆகிய இருவரும் மிகவும் பணிவுடன், நாங்கள் நடந்து வருகின்றோம். ஹுஸூர் சவாரி செய்து வாருங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுடைய கூற்றை ஏற்கவில்லை. மேலும் புன்னகைத்தவாறு நீங்கள் இருவரும் நடந்து செல்வதில் என்னை விட அதிக வலிமையானவர்கள் அல்ல. மேலும் நான் உங்கள் இருவரையும் விட நற்கூலியை பெறுவதிலும் அதிக தேவையில்லாதவன் அல்ல என்று கூறினார்கள்.

பத்ர் போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹார்ஸா அவர்களை மதீனாவாசிகளுக்கு நற்செய்தி வழங்குவதற்காக அனுப்பினார்கள். ஹஸ்ரத் ஸைது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒட்டகத்தில் வந்தார்கள். மேலும் உரத்த குரலில், ரபீஆவின் இரண்டு மகன்களான உத்பா மற்றும் ஷைபா மற்றும் ஹிஜாஜ் அவர்களின் மகனான அபூஜஹில் மற்றும் அபுல் பஹ்தரி ஸம்அ பின் அல் அஸ்வத், உமைய்யா பின் ஹலஃப் ஆகிய இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள். மேலும் சுஹைல் பின் அம்ர் மற்றும் பலரும் கைதிகளாகி விட்டனர் என்று கூறினார்.மக்கள் ஸைது பின் ஹார்ஸா அவர்களது பேச்சை நம்பவில்லை. ஸைது தோற்று விட்டு திரும்பியுள்ளார் என்று கூறினர்.

ஒரு நபர் ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்களிடம், உங்களுடன் வந்தவர்கள் எந்த அளவுக்கு பிரிந்து விட்டார்கள் என்றால் மீண்டும் ஒருபோதும் அவர்கள் ஒன்று சேர மாட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களது சஹாபாக்களும் ஷஹீதாகி விட்டனர். இது அன்னாரது ஒட்டகமாகும். நாம் இதை அறிவோம் என்று கூறினார்.

ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள், அல்லாஹ் நீங்கள் கூறுபவற்றை பொய்யாக்குவான் என்று கூறினார்கள். யூதர்களும் கூட ஸைது தோல்வியடைந்து தான் திரும்பியுள்ளார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது அவர்கள் கூறுகின்றார்கள். நான் எனது தந்தையிடம் தனிமையில், தந்தையே! நீங்கள் கூறுவது உண்மையா? என்று கேட்டேன். ஹஸ்ரத் ஸைது அவர்கள் கூறினார்கள். எனது மகனே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் கூறுவது உண்மையாகும். ஹஸ்ரத் உஸாமா அவர்கள், இந்த கூற்றை கேட்டு எனது உள்ளம் வலுப்பெற்றது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ லபாபா அவர்களின் எளிமை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட பேரன்பு தொடர்பான சம்பவம் இவ்வாறு வருகின்றது. ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ் போரிலிருந்து நகரத்திற்கு திரும்பி வந்தார்கள். அன்னாருக்கு அல்லாஹ் கஷ்ஃப் காட்சியின் மூலமாக, எப்போது வரை பனு குரைலாவின் ஏமாற்றுதல் மற்றும் கிளர்ச்சி ஆகியவற்றிற்கான முடிவு தெரியவில்லையோ அப்போது வரை நீங்கள்

ஆயுதங்களை கழற்றி இருக்கக்கூடாது என்று கூறப்பட்டது. அன்னார் எல்லா சஹாபாக்களிடமும் பனூ குரைலாவின் கோட்டைக்கு திரும்பி செல்லுமாறும், அஸர் தொழுகை அங்கு சென்று தொழப்படும் என்று அறிவிப்பு செய்தார்கள். ஆரம்பத்தில் யூதர்கள் கடுமையான ஆணவத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். ஆனால் காலம் கடந்து செல்லச்செல்ல முஸ்லிம்கள் தம்மை கடுமையாக சூழந்து கொண்டதையும், தமது இயலாமையையும் பற்றிய உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. இறுதியில் அவர்கள் தமக்கிடைய தற்போது என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்தனர்.

அவர்கள் இந்த திட்டத்தை வகுத்தார்கள். அதாவது, இவர்களுடைய தொடர்பில் இருக்கக்கூடிய ஏதாவதொரு முஸ்லிம் அவர் தமது எளிமையின் காரணமாக இவர்களுடைய பொய்யில் சிக்கக்கூடியவரை தமது கோட்டைக்கு அழைப்போம். மேலும் அவரின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள்? என்று தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வோம் என்று திட்டம் தீட்டினார்கள்.

எனவே அவர்கள் ஒரு தூதுவரை அனுப்பி, நாங்கள் ஆலோசனை நடத்துவதற்காக அபூ லுபாபா பின் மன்ஸர் அன்ஸாரி அவர்களை எங்களது கோட்டைக்கு அனுப்பி வைக்குமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்தனர்.

அன்னார் அபூ லுபாபா அவர்களுக்கு அனுமதியை வழங்கினார்கள். மேலும் அவர் அவர்களது கோட்டைக்கு சென்றார்கள். பனூ குரைலாவின் தலைவர்கள் முதலிலேயே இந்த திட்டத்தை வகுத்திருந்தார்கள். அதாவது அபூ லுபாபா கோட்டைக்குள் நுழைந்த உடனேயே யூதர்களின் அனைத்து பெண்களும் குழந்தைகளும் அழுது மன்றாடியவாறு அவர்களை சூழ்ந்து கொள்ள வேண்டும். மேலும் தமது துக்கங்களையும், சோதனைகளையும் எடுத்துரைத்தவாறு அவருடைய உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முழுமையான முயற்சியை செய்ய வேண்டும்.

இறுதியாக அபூ லுபாபா மீது அவர்களது பொய்யான தாக்கம் ஏற்பட்டது. அபூ லுபாபாவே! நீர் எங்களது நிலைமைகளை எவ்வாறு காண்கின்றீர்? நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முடிவின் படி எங்களது கோட்டையிலிருந்து கீழே இறங்கி வரவா? என்று பனூ குரைலாவைச் சேர்ந்தவர்கள் கேட்டதற்கு, அபூ லுபாபா அவர்கள், கீழே இறங்கி வாருங்கள் என்று கூறியவாறு தமது கழுத்தில் கையை தடவியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களை கொல்வதற்கான கட்டளையையே வழங்குவார்கள் என்று சைகை செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் கூறுகின்றார்கள். நாம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலை ஏமாற்றி விட்டேன் என்ற எண்ணம் என்னிடம் தோன்றிய போது எனது கால்கள் நடுங்கியது. அன்னார் அங்கிருந்து மஸ்ஜிது நபவிக்கு வந்தார்கள். மேலும் தமக்குரிய தண்டனையாக பள்ளிவாசலிலுள்ள ஒரு தூணில் தம்மைத்தாமே கட்டினார்கள். மேலும், எப்போது வரை இறைவன் எனது தவ்பாவை ஏற்றுக் கொள்ள மாட்டானோ அப்போது வரை இவ்வாறே கட்டப்பட்டிருப்பேன் என்று கூறினார்கள். மேலும் நான் பதினைந்து நாட்கள் இந்த துன்பத்திலேயே இருந்தேன் என்று ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அபூ லபாபா அவர்களது தவ்பா ஏற்றுக் கொள்ளப்பட்டது தொடர்பான செய்தி எனது வீட்டில் இறங்கியது. நான் சஹ்ர் நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்னகைப்பதை கண்டேன். நான் அன்னாரிடம், அல்லாஹ் எப்போதும் உங்களை சிரித்த முகத்துடன் வைப்பானாக. தாங்கள் எதற்காக சிரித்தீர்கள்? என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ லுபாபாவின் தவ்பா ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்று கூறினார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் ரஸூலே! நான் அவருக்கு இதைப் பற்றி தெரிவித்து விடட்டுமா? என்று கேட்டேன். அதற்கு அன்னார், நீங்கள் விரும்பினால் தெரிவித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்கள் கூறுகின்றார்கள். நான் அந்த அறையின் கதவுக்கு அருகே நின்றவாறு, அபூ லுபாபே! மகிழ்ச்சியடையுங்கள். அல்லாஹ் உங்கள் மீது அருள் செய்தவாறு உங்களது தவ்பாவை ஏற்றுக் கொண்டான் என்று கூறினேன். மக்கள் ஓடிச் சென்றவாறு அபூ லுபாபா அவர்களை அவிழ்த்து விட முற்பட்டார்கள். ஆனால் அவர்களோ, இல்லை! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் என்னை அவிழ்த்து விடுவார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பஜ்ர் தொழுகைக்காக சென்றிருந்தார்கள். தமது புனித கரங்களால் அவர்களை அவிழ்த்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நான் எனது சொந்த வீட்டை (எங்கு என்னிடமிருந்து இந்த தவறு நிகழ்ந்ததோ) விட்டு விடுகின்றேன். மேலும் நான் எனது செல்வத்தை அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் வழியில் சதகாவாக கொடுத்து விடுகின்றேன் என்று கூறினார்கள். அன்னார் மூன்றில் ஒரு பங்கை சதகாவாக கொடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்களும் மூன்றில் ஒரு பகுதியை சதகாவாக கொடுத்தார்கள். மேலும் அன்னார் தமது சொந்த வீட்டையும் விட்டு விட்டார்கள்.

அல்லாமா இப்னு ஸஅத் அவர்கள் எழுதுகின்றார்கள். கேன்கா போர் மற்றும் ஸவீக் போரிலும் ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் தமது பிரதிநிதியாக இருப்பதற்கான நற்பேற்றை வழங்கினார்கள். ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு பயணத்தில் கூடவே இருந்தார்கள். அன்ஸார்களின் அம்ர் பின் அவ்ஃப் என்ற கோத்திரத்தின் கொடி அவர்களின் கையில் இருந்தது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு போரிலும் கலந்து கொண்டுள்ளார்கள். அவர்களது

மரணம் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருக்கின்றது. சிலர் ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் ஹஸ்ரத் அலி அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானர்கள் என்று கூறுகின்றனர். மேலும் சிலர் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களது ஷஹாதத்திற்குப் பிறகு அன்னாரது வஃபாத் நிகழ்ந்தது என்று கூறுகின்றாார்கள். மேலும் அவர்கள் ஹிஜ்ரி 50 வரை உயிரோடு இருந்தார்கள் என்ற ஒரு கருத்தும் காணப்படுகிறது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். இதுவே இந்த சஹாபாக்களின் நிலைமைகளாகும். அல்லாஹ் இவர்களது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அவற்றில் ஒரு ஜனாஸா இங்கு இருக்கின்றது. மற்றொன்று ஜனாஸா காயிப் ஆகும்.

ஜனாஸா காயிப் லாஹூரிலுள்ள சவாபா கார்டனைச் சார்ந்த மதிப்பிற்குரிய காஸி ஷஃபான் அஹ்மது கான் சாஹிப் ஷஹீது அவர்களுடையதாகும். 25 ஜூன் 2018 அன்று எதிரிகள் அவர்களது வீட்டிற்குள் நுழைந்து அன்னாரை சுட்டு ஷஹீதாக்கினார்கள். انا للہ وانا الیہ راجعون

ஷஹீது மர்ஹூம் அவர்கள் 2001 ஆம் ஆண்டு முஹம்மது இக்பால் என்ற நமது நண்பரின் மூலமாக தமது குடும்பத்துடன் பைஅத் செய்தார். ஷஹீது மர்ஹூம் அவர்கள் எண்ணற்ற நற்பண்புகளுக்கு உரிமை படைத்தவர் ஆவார். பைஅத்திற்குப் பிறகு காஸி சாஹிப் அவர்கள் கலப்பற்ற நபராகவும், சிறந்த மனிதராகவும் நிரூபணமானார்கள். கிலாஃபத்தோடு அதிகம் அதிகமான அன்பும், வலுவான தொடர்பும் இருந்தது. தாமும், தமது குடும்பமும் கிலாஃபத்தோடு தொடர்பில் இருக்க வேண்டும் என்பதற்காக ஷஹீது மர்ஹூம் அவர்கள் தமது விட்டில் M.T.A பார்ப்பதற்காக டிஷ்ஷை வைத்திருந்தார்கள். பொருள் தியாங்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கெடுக்கக் கூடியவராக திகழ்ந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் தமக்குப் பின்னால் மனைவி மற்றும் மூன்று மகள்களை விட்டுச் சென்றுள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் அல்லாஹ்வே பாதுகாவலனாக இருப்பானாக. இவர்களை எல்லா பிரச்சனைகளிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் காஸி சாஹிப் அவர்களது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

இரண்டாவது ஜனாஸா இங்கு இருக்கின்றது. அது மதிப்பிற்குரிய சேட் முஹம்மது கவ்ஸ் சாஹிப் அவர்களது மகளான மதிப்பிற்குரிய அம்மத்துல் ஹய் சாஹிபா அவர்களுடையதாகும். ஜூன் 23 ஆம் தேதி வஃபாத்தானார்கள். அன்னாருக்கு 100 வயதை விட அதிகமாகும். انا للہ وانا الیہ راجعون

அம்மத்துல் ஹய் சாஹிபா ஐவேளை தொழுகையை முறையாக பேணக்கூடியவர்களாகவும், கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும், மிகவும் கலப்பற்ற தன்மையை வெளிப்படுத்தக் கூடியவர்களாகவும் விளங்கினார்கள். மிகவும் நல்ல மற்றும் தூய்மையான பெண்மணி ஆவார்கள். வஸிய்யத்தும் செய்திருந்தார்கள். தமக்குப் பின்னால் இரண்டு மகள்களையும், இரண்டு மகன்களையும் மற்றும் பெரும் எண்ணிக்கையில் பேரக்குழந்தைகளையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னார் ஜெர்மனியைச் சார்ந்த முஹம்மது இத்ரீஸ் ஹைதராபாதி சாஹிப் அவர்களது தாய் ஆவார்கள். அல்லாஹ் அவர்களது தகுதியை உயர்த்துவானாக. மேலும் அவர்களது சந்ததிகளுக்கும் கிலாஃபத்தோடு உண்மையான தொடர்பை நிலைத்திருக்கச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

**மொழியாக்கம் : முஅல்லிம் அ.கலீல் அஹ்மது**